# ஏப்ரல் - 22 - திங்கள்

**தூய அசிசி ஆக்னேஸ்**

**இறந்து அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்'' - மத்.28:8**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 2 : 14, 22 – 33

பெந்தகோஸ்தே நாளில் பேதுரு பதினொருவருடன் சேர்ந்து, எழுந்து நின்று, உரத்தக் குரலில் அவர்களிடம் பின்வருமாறு கூறினார் "யூத மக்களே, எருசலேமில் வாழும் மக்களே, இதைத் தெரிந்து கொள்ளுங்கள். எனது சொற்களைக் கவனித்துக் கேளுங்கள். இஸ்ரயேல் மக்களே, நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளுங்கள். கடவுள் நாசரேத்து இயேசுவின் வழியாக உங்கள் நடுவில் வல்ல செயல்களையும் அருஞ்செயல்களையும் அடையாளங்களையும் செய்து, அவரை இன்னாரென்று உறுதியாகக்காண்பித்தார். இது நீங்கள் அறிந்ததே. கடவுள் தாம் வரையறுத்துள்ள திட்டத்தின் படியும், தம் முன்னறிவின்படியும் இந்த இயேசுவை உங்கள் கையில் விட்டுவிட்டார். நீங்கள் திருச்சட்டம் அறியாதார் மூலம் அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றீர்கள். ஆனால் கடவுள் அவரை மரணவேதனையினின்று விடுவித்து உயிர்த்தெழச்செய்தார். ஏனென்றால் மரணம் அவரைத் தன் பிடியில் வைத்திருக்க முடியவில்லை. தாவீது அவரைக்குறித்துக் கூறியது : "நான் ஆண்டவரை எப்போதும் என் கண்முன் வைத்துள்ளேன் அவர் என் வலப்பக்கம் உள்ளார் எனவே நான் அசைவுறேன். இதனால் என் இதயம் பேறுவகைகொள்கின்றது. என் நா மகிழ்ச்சியால் நிறைந்து உள்ளது. என் உடலும் எதிர்பார்ப்பில் நிலைத்திருக்கும். ஏனென்றால் என்னைப் பாதாளத்திடம் ஒப்புவிக்கமாட்டீர். உம் தூயவனைப் படுக்குழியைக் காணவிடமாட்டீர். வாழ்வின் வழியை நான் அறியச்செய்வீர உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு." "சகோதர சகோதரிகளே, நமது குல முதல்வராகிய தாவீதைக் குறித்து நான் சொல்வதை மறுக்க மாட்டீர்கள். அவர் காலமாகி அடக்கம் செய்யப்பட்டார். அவர் கல்லறை இந்நாள்வரை நம்மிடையே இருக்கிறது. அவர் இறைவாக்கினர் என்பதால், தம் வழித்தோன்றல் ஒருவர் அவரது அரியணையில் வீற்றிருப்பார் என்று கடவுள் உறுதியாக ஆணையிட்டுக் கூறியதை அறிந்திருந்தார். அவர் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை முன்னறிந்து, "அவரைப் பாதாளத்திடம் ஒப்புவிக்க மாட்டீர் அவரது உடல் படுகுழியைக் காணவிடமாட்டீர்" என்று கூறியிருக்கிறார். கடவுள் இந்த இயேசுவை உயிாத்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள். அவர் கடவுளின் வலதுப்பக்கத்துக்கு உயர்த்தப்பட்டு, வாக்களிக்கப்பட்ட தூய ஆவியைத் தம் தந்தையிடமிருந்து பெற்றுப் பொழிந்தருளினார். நீங்கள் காண்பதும் கேட்பதும் இதுதான்.

**பதில்பாடல் :** இறைவா என்னைக் காத்தருளும், உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்.

## நற்செய்தி : மத்தேயு 28 : 8 – 15

அக்காலத்தில் கல்லறையில இயேசுவைக் காணவந்த பெண்கள் கல்லறையைவிட்டு விரைவாகப் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் அச்சமுற்றாலும் அதே வேளையில் பெருமகிழ்ச்சியுற்றவர்களாய் அவருடைய சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள். திடீரென்று இயேசு அவர்களை எதிர்கொண்டு வந்து வாழ்த்தினார். அவர்கள் அவரை அணுகி அவர் காலடிகளைப பற்றிக் கொண்டு பணிந்து நின்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களிடம், "அஞ்சாதீர்கள்! என் சகோதரர்களிடம் சென்று அவர்களைக் கலிலேயாவுக்குப் போகுமாறு சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்" என்றார். அவர்கள் போய்க்கொண்டிருந்த போது காவல் வீரருள் சிலர் நகரத்திற்குள் சென்று, நிகழ்ந்தவை யாவற்றையும் தலைமைக் குருக்களுக்கு அறிவித்தனர். அவர்கள் மூப்பர்களுடன் கூடிக் கலந்து ஆலோசித்து அப்படை வீரருக்கு மிகுதியாகப் பணம் கொடுத்து, "நாங்கள் தூங்கிக் கொண்டிருந்த போது இயேசுவின் சீடர் இரவில் வந்து அவரது உடலைத் திருடிச் சென்றுவிட்டனர்" எனச் சொல்லுங்கள். ஆளுநர் இதைக் கேள்வியுற்றால் நாங்கள் அவரை நம்பச் செய்து நீங்கள் தொல்லைக்கு உள்ளாகாதபடி பார்த்துக் கொள்வோம்" என்று அவர்களிடம் கூறினார்கள். அவர்களும் பணத்தைப் பெற்றுக் கொண்டு தங்களுக்கு அவர்கள் சொல்லிக் கொடுத்தவாறே செய்தார்கள். இந்நாள் வரை இந்த வதந்தி யூதரிடையே பரவியிருக்கிறது.

**தியானம்:** **இ**யேசு ஏக்கத்தின் மத்தியில், துன்பத்தின் மத்தியில், ஏமாற்றத்தின் மத்தியில், பிரசன்னமாக இருக்கிறாா். உத்தான விழாவின் பின்வரும் திருத்தூதர் பணி வாசகங்கள் ஆரம்பகால திருச்சபையின் செயற்பாடுகளைக் காட்டுவதால், திருத்தூதர் பணி நூலை "பரிசுத்த ஆவியானவரது செயற்பாடுகளை விபரிக்கின்ற வரலாற்று நூல்" என்று கூறினால் மிகையாகாது. இறைமகன் இயேசு எம்மாவுஸ் வழிப்பயணத்தில் அன்னியராக தமது அன்புச்சீடர்களோடு வழிநடந்தது மட்டுமல்ல, சீடர்களது உள்ளத்தில் தம்மைப்பற்றிய உணர்வை உருவாக்கியது போன்று, எங்களோடும் திருப்பலி, இறைவார்த்தைகள் வழியாக உறவாடுகின்றார். அவரது வல்லசெயல்களையும், அன்பையும் சுவைபார்த்திட தமது திருவிருந்துப்பந்திக்கு எம்மை அனுதினமும் அழைக்கின்றார். பரிசுத்த திருப்பலிகளில் பங்கெடுக்கும் பொழுது, இயேசுவோடு பயணிக்கும் எம்மாவு அனுபவத்தை உணர்ந்துள்ளோமா? சிந்திக்க நற்செய்தி அழைக்கின்றது. நற்செய்தியில் எம்மாவுஸ் சீடர்களும், அப்பத்தைப்பிட்டு இறைவார்த்தையை விளக்குமளவும் இயேசுவை யாரென அறிந்து கொள்ளாததனை அவதானிக்கலாம். முதலில், இயேசு நற்செய்தியை போதிக்கும்போது, அவர்களின் இதயம் மட்டும் புரிந்து கொண்டதெனினும் (லுக்கா 24:32) அப்பத்துண்டுகளை பங்கிடும்வரை அவர்களது ஊனக்கண்களால் இயேசுவின் உண்மையான உருவத்தை (லுக்கா 24:30-31) கண்டுபிடிக்க முடியவில்லை. இறைமகன் கிறிஸ்து தம்மைக் குறித்து அறிகின்ற வாஞ்சையை எமதுள்ளத்தின் ஆழத்தில் அதிகமதிகமாக உருவாக்க விரும்புகின்றார் என்ற உண்மை இறை வார்த்தையை நாம் வாசிக்கும் ஒவ்வொரு தடவைகளிலோ, அல்லது திருப்பலியில் நாம் பங்கெடுக்கும் வேளையிலோ, இறைமகன் இயேசுவோடு ஒன்றிணைக்கப்பட அழைக்கப்படுகிறோம். பரிசுத்த திருப்பலியில நாம் எமதுள்ளத்தை இயேசுவிற்காக திறந்து வைத்தால், உயிர்த்தெழுந்த இயேசு, சாதாராண அப்பத் துண்டாக அல்லாமல், அப்ப இரச வடிவினில் நம்மிடையே இருப்பதை உணர்ந்து கொள்ளலாம். பரிசுத்த நற்கருணையில் இயேசு இருப்பதை ஒவ்வொரு பரிசுத்த திருப்பலி வழியாக நாம் நினைவுகூர்ந்து, எமது அந்தரங்கத்தில் இயேசுவோடு ஒன்றிணைய எப்போதும் தயாராக இருப்போம். இறைமகன் இயேசு எம்மை எமது பாவ வாழ்விலிருந்து தூக்கியெடுத்து பரலோக தகப்பனது அன்பினாலும், கிருபையினாலும் நிரப்புவதற்கு தயாராக இருக்கின்றார் என்ற உண்மையை உணர்ந்து விசுவசிப்போம்.